விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 தை 27 றஜப் 23 இதழ்: 289
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 9-2-1991

## உலக வரலாற்றின் உச்சியில் எமது போராளிகள் நிற்கிறார்கள்!

### யோகி அஞ்சலி உரை

(நாவற்குழி)
எமது போராளிகள் உலகப் போராட்ட வரலாற்றின் உச்சியில் நிற்கிறார்கள் என்று விடுதலைப் புலிகள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. யோகி யோகரத்தினம் தெரிவித்தார்.

மாவிட்டபுரம் தச்சன்காட்டில் வீரமரணமடைந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பலம் பற்றி மதிப்பிடும் ஓர் ராஜதந்திரி

(லண்டன்)
வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசுப் படையினரின் வெற்றி பெருமளவு பின்னடைந்து வருவதாக மேற்குலக ராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கில் புலிகளின் தாக்குதல் தீவிரம்

# பெருமளவு படையினர் பலி

## - அரசு பெரும் கவலை -

[கொழும்பு]

வடக்கு-கிழக்கில் கடந்தசில தினங்களில் விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதல்களில் 30 க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டும் 60 க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துமுள்ளனர். இது குறித்து அரசு பெரும் கவலையடைந்துள்ளது.

மட்டக்களப்பில் வெலிவெளி இராணுவ முகாமிலிருந்து களுவாஞ்சிக்குடி முகாமை நோக்கி சென்று கொண்டிருந்தஇராணுவஅணி மீது பெரிய போரதீவுக்கும் பட்டிருப்பு பாலத்துக்குமிடையில் நேற்றுமுன்தினம் மாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் பல படையினர் பலியாயினர்.

இத்தாக்குதலின் போது

(3ம் பக்கம் பார்க்க)

## ராஜீவை பிரதமராக்க திரைமறைவில் முயற்சி

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் திரு. சந்திரசேகரின் பதவிக்கு ஆபத்து வந்துள்ளது. திரு. ராஜீவ் காந்தியை பிரதமராக்க திரைமறைவில் பல முயற்சிகள் நடைபெற்றுவருகிறது.

இந்த முயற்சியில் காங்கிரஸ் தலைவர்கள் பலர் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள் ஜனதாதள். ஜனதாதள் (எஸ்) கட்சியிலிருந்து பலரை இழுக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகிறது.

எனினும் கட்சித்தாவல் தடைச்சட்டம் இதற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## லொறி மோதி பலி

(பூநகரி)
வவுனியாவில் இருந்து மினிபஸ்ஸில் யாழ்ப்பாணம் பிரயாணம் செய்த ஒருவர் சங்குப்பிட்டி இறங்குதுறைக்கருகாமையில் மினிபஸ்லிருந்து தலையை வெளியே நீட்டிய

(4-ம் பக்கம் பார்க்க)

## வாக்கெடுப்பு தோல்வி நீதி விசாரணை நிராகரிப்பு

(கொழும்பு)
பிரபல பத்திரிகையாளர் திரு. ரிச்சட் டி சொய்ஸா கொலைபற்றி விசாரணை கமிஷன் நியமிக்கக்கோரி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தோல்வியடைந்தது.

இந்தபிரேரணையைஎதிர்த்து அரச தரப்பினர் அனைவரும் வாக்களித்ததையடுத்தே பிரே

(4-ம் பக்கம் பார்க்க)

## படைகள் தயார்

(கொழும்பு)

அரசுக்கு எதிராக எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை முறியடிக்க படைகள் தயாராக இருப்பதாக பாதுகாப்பு ராஜங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தன தெரிவித்துள்ளார்.

## தமிழ் குழுக்களுடன் பேச சுக்ளா மீண்டும் வருகிறார்?

(புதுடில்லி)
இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. வி. சி. சுக்ளா கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களையும் சிங்களக் கட்சிகளையும் சந்தித்து பேச்சுக்களை நடாத்த எதிர்வரும் 16ம் திகதி மீண்டும் இலங்கை செல்லவுள்ளதாக புதுடில்லியில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் தவிர்ந்த

(4ம் பக்கம் பார்க்க)

## படையினர் கடமை மிக கவனமாயிருக்கிறது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் விமானக் குண்டு வீச்சு, தரைவழி தாக்குதல் நடாத்தப்படும்வேளைகளில் பொதுமக்கள் எவரும் பாதிக்காத விதத்தில் மிக அவதானமாக படையினர் நடந்து வருவதாக அமைச்சர் திரு. ரஞ்சன்விஜயரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சில வெளிநாட்டு நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதாக சில வெளிநாட்டு நிருபர்கள் அங்கு தெரிவித்துள்ளனர். (சி)

## கொழும்பில் தமிழர் தொடர்ந்தும் கைது

(கொழும்பு)
வடக்கு-கிழக்கிலிருந்து வரும் தமிழர்களை கொழும்பில்பொலிஸார் கைது செய்து விசாரணைக்குட்படுத்திவருகின்றனர்.

தலைநகர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், தமிழர்கள் விசாரணை செய்யப்படுதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(4ம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி பகுதியில் பரவலாக ஹெலிதாக்கு!

(நாவற்குழி, சாவகச்சேரி நிருபர்கள்)
தென்மராட்சியின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் ஹெலிகொப்டரில்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தரன் ஸ்ரூடியோ

நபர்சீல், கலர் கறுப்பு வெள்ளை படங்கள், பாஸ்போட், அடையாள அட்டை, 12''x10'' படங்கள் பிளாஸ்ரிக்போட், விளம்பரபோட் மற்றும் ஓவிய வேலைகள். 24, ஈழ்வீதி, (ரெட்ணவீதி) யாழ்ப்பாணம். (சி-4302)

### விற்பனைக்கு

அஷ்டலக்ஷ்மி மாதக்கலண்டர் பிரதான கருமங்களை உள்ளடக்கி வெளிவந்துவிட்டது. விலை ரூபா 20/- வியாபாரிகளுக்கு 15 வீதகழிவுண்டு நேரில் வருக. அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம் கைதடி. (எ-1075)

### வரலாறு

விற்பனையாகின்றது. வரலாறு-ஆண்டு-11, வரலாறு ஆண்டு-6 (புதிய பாடத்திட்டம்). ஆக்கியோன்: ந தர்மபாலன். சகல புத்தகசாலைகளிலும்பெற்றுக்கொள்ளலாம். (கி-4317)

### பரிசு தரும் 'அக்கினி'

மீரா வெளியீடான 'அக்கினி' நாவலை வாங்கியவர்கள் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பனை 28ம் தேதிக்குள் அனுப்புங்கள். குலுக்கலில் தெரிவு செய்யப்படும் முதல்பத்துவாசகர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 400/- ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்படும். துர்க்கா ஸ்ரேசனேர், கன்னாகம். திருக்கணிதம், சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை. நல்லூர். (கி-4321)

### தனிப்பட்ட பிரயோக வகுப்புகள்

A/L பௌதிகவியல், தூய கணிதம் பிரயோகணிதம் தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளோடு விஷேஷமாக பல வருடம் அனுபவம் பெற்றுள்ள ஆசிரியரினால் கற்பிக்கப்படுகிறது. விபரங்களுக்கு: பாலா B. Sc. (Cey) 17/1. பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி-4334)

### ஜோதிடம்

சனிமாற்றம் எங்கும் கிடைக்கும். சனி ராகு கேது வியாழன் நேர்க்கோட்டினதும், 7 மாதச் செவ்வாயினதும் கெட்ட சஞ்சாரங்களும், 31-3-91) வரை குரு கேது சண்டாளப் பாவயோகங்களும் வளைகுடாப் போரை மோசமடையச் செய்து உலகில் பொருளாதார அழிவுகளையும். ஏற்படுத்தும் Prof. சத்தியதாஸன் ஞானம் ஸ்ரோர்ஸ் சித்தன்கேணி. (கி-4333)

## வெங்காயப் பூ வீசப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளில் வெங்காயப் பூ தேவையற்ற பொருளாக வீதிகளில் வீசப்படுகிறது.

பாவனைக்கு எடுக்கமுடியாத நிலையில் வீதிகளிலும், குப்பை மேடுகளிலும் குவிந்துகிடக்கக் காணப்படுகிறது. (ச)

## இறங்குதுறை திருத்த வேலைகள்

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறைமுகத் திருத்தவேலைகளை உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது.

## வருடாந்த கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை சங்கத்தானைப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## தபால் பொதிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கான தபால் பொதிகளை வவுனியா துறைமுகம் ஊடாக கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (83)

## இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில், வீரமரணமடைந்த போராளியின் (வா. சசிக்குமார் - கைதடி) இறுதி அஞ்சலி நேற்று முன்தினம் கைதடியில் நடைபெற்றது.

வீதிகள் தோறும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு, இறந்த போராளிக்கு மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

# பன்னாட்டுப் படை 52,000 தடவை தாக்கியும் ஈராக்கை வெல்ல முடியவில்லை

(பக்தாத்)

ஈராக் மீது 52,000 தடவைகள் பன்னாட்டுப் படைகள் தாக்குதல் நடத்தியும் ஈராக்கை வெல்ல முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

### போர்க்கப்பல் தாக்குதல்

அமெரிக்காவின் போர்க்கப்பலான 'விஸ்கான்சன்' பாக்தாத் நகரை நோக்கி கரும் பீரங்கித்தாக்குதல் நடத்திவருவதாக அண்மையில் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

### அமெரிக்கா மறுப்பு

ஈராக் குடியிருப்புகள் மீது கண்மூடித்தனமான முறையில் அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடாத்தி வருவதாக ஈராக் சுமத்திய குற்றச்சாட்டை அமெரிக்க அதிகாரி மறுத்துள்ளார். இரு ஈராக்கிய ஹெலிகொப்டர்களை தமது படையினர் சுட்டு வீழ்த்தியுள்ளதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### ஈரானின் சமாதானமுயற்சி தோல்வி

(வாஷிங்டன்)

வளைகுடாப் பிரச்சினை தொடர்பாக ஈரான் மேற்கொண்டுவரும் சமாதான முன் முயற்சிகளை அமெரிக்கா முற்றாக நிராகரித்துள்ளதாக அமெரிக்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### சோவியத்யூனியன் கவலை

(மாஸ்கோ)

ஐ. நா தந்துள்ள அதிகாரத்தையும் மீறி ஈராக்கிய குடியிருப்புக்களை தாக்கி சேதப்படுத்தி பொதுமக்கள் பலர் இறக்கக் காரணமான அமெரிக்க கூட்டணி படையின் நடவடிக்கைகள் குறித்து சோவியத் பாராளுமன்றத்தின் சர்வதேசக் கமிட்டி கவலை தெரிவித்துள்ளது என்று டாஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (மா)

### போரை முடிவுக்கு கொண்டுவர முயற்சி

(மாஸ்கோ)

வளைகுடாப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் நாடுகள் பல கூட்டாகவும் தனித்தனியாகவும் ஈடுபட்டு வருகின்றன.

சோவியத்யூனியன், ஈரான் ஆகிய நாடுகள் இம் முயற்சியில் ஈடுபட்டுவருவதாகவும், அவுஸ்திரலிய கிறிஸ்தவ அமைப்பு ஒன்று இம் முயற்சியில் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (க)

### 345 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

(பக்தாத்)

ஈராக் படைகள். 345 பன்னாட்டுப் படைகளின் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது. ஈராக்கின் 120 விமானங்கள் அழிக்கப்பட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. தமது தரப்பில் 65 விமானங்களே வீழ்த்தப்பட்டதாகம் பன்னாட்டுப் படைகள் அறிவித்துள்ளது.

கடந்த 22-ம் நாள் யுத்தத்தில் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாக சுயாதீன செய்திகள் தெரிவிக்கின்றன. (கி)


இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
யாழ். பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில்

**உயர் தொழில் ஆங்கிலச் சான்றிதழ்-1991**

**CERTIFICATE IN PROFESSIONAL ENGLISH-1991**

மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கென 10-02-91 ஞாயிற்றுக்கிழமை காலை நடத்தப்படவிருந்த நிலைப்படுத்தல் பரீட்சை (Grading Test) அடுத்த ஞாயிற்றுக்கிழமை 17-02-91 காலை 10 மணிக்கு நடைபெறும்.

மு. தில்லைநாதன்,
உதவிப்பணிப்பாளர்.

(சி 4336)



**PATRICIAN INSTITUTES**

தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

City and Guilds of London Institute

QUANTITY SURVEYING (Part I) —6 Months

ELECTRICAL WIRING—மின்சார இணைப்பு —3 Months

மேற்படி இரு பயிற்சி நெறிகளும் எதிர்வரும் 15-02-91 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.

பதிவாளர் / REGISTRAR
பற்றிஸியன் இன்ஸ்ரிரியூட்ஸ், / PATRICIAN INSTITUTES
59, சென். பற்றிக்ஸ் வீதி, / 59, St. Patrick's Rd.
யாழ்ப்பாணம். / Jaffna.

(ஏ 1089)


## தரைப்படைத் தாக்குதல் விரைவில் முடிவு

(வாஷிங்டன்)

தவிர்க்க இயலாத தரைப் படைத் தாக்குதல் நடவடிக்கை பற்றி அமெரிக்க அரசு விரைவில் ஓர் முடிவு எடுக்கும் என்று அமெரிக்க இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஈராக்கிய போர் ஆற்றல் திறனை பதினாண்டு கால பழமை வாய்ந்தாக பன்னாட்டு விமானப் படை தாக்குதல்கள் ஆக்கிவிட்ட போதும் வான் தாக்குதல் மட்டுமே போர் ஒன்றில் வெற்றி பெற்றுவிட முடியாது என்று வாஷிங்டனில் நேற்று லெப் ஜெனரல் தொம் கெலி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ஒரு வாரத்திற்குள் அமெரிக்க தரைப்படைத் தாக்குதல் தொடர்ந்து விடும் என்று அமெரிக்க இராணுவ தலைமையக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. டிக்ஸாசேனி, முப்படைத்தலைவர்களின் கூட்டுச்சபைத்தலைவர் ஜெனரல் போவில் ஆகியோர் நிலைமையை நேரில் ஆராய சவூதி அரேபியா செல்வார்கள் என்று அதிபர் புஷ் மேற்கொண்டுள்ள முடிவு தரைப் படைகளுக்கான ஆயத்த நடவடிக்கையே என்று இராணுவ வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

வாஷிங்டனின் அதிபர் புஷ் செய்தியாளர் கூட்டத்தில் இதனை தெரிவித்தார். (மா)

# தொலைக்கல்வி இறுதிப் பரீட்சைவிண்ணப்பம்கோரல்

(நாவற்குழி)

தொலைக்கல்வி மூலம்பயிற்சி பெறும் 89/91 கல்வியாண்டிற்கான பயிற்சி ஆசிரியர்களின் இறுதிப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் உடனடியாக அனுப்பவேண்டியுள்ளதால் 89/91 கல்வியாண்டின் பயிற்சி பெறும் சகல பயிற்சிஆசிரியர்களையும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் அமைந்திருக்கும் யாழ். மாவட்ட தொலைக்கல்விப் பிரிவு அலுவலகத்திற்கு உடனடியாகச் சமுகம் தந்து தங்களது விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்யுமாறு யாழ். மாவட்டத் தொலைக்கல்விப் பிரிவில் சிரேஷ்டவிரிவுரையாளர் திரு. ம. செ. அலெக்ஸாந்தர் தெரிவித்தார்.

பயிற்சி ஆசிரியர்கள் வரும்போது தங்களுடையபிறப்புச் சாட்சிப்பத்திரம் உட்பட சகல சான்றிதழ்களும் கொண்டு வரவேண்டும்.

மேலும் 89/91 கல்வியாண்டிற்கான பயிற்சி ஆசிரியர்களுக்கும், 90/92 கல்வியாண்டிற்கான பயிற்சி ஆசிரியர்களுக்கும் நாளை 9ம் திகதி ஒரு நாள் கற்கைவட்ட வகுப்புகள் நடைபெறும் எனவும் திரு அலெக்ஸாந்தர் தெரிவித்தார். [107]

# ஆஸ்பத்திரிக்கு நிதி உதவி வைத்தியஅதிகாரிஆலோசனை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தியின் பெயரிலோ அல்லது உபகரணங்களை வாங்குவதற்கோ பணம் சேகரிக்கும். உரிமை வைத்தியசாலை ஊழியர்களுக்கோ தனிப்பட்டவர்களுக்கோ வழங்கப்படவில்லை.

இக்காரணங்களுக்காக வைத்தியசாலை ஊழியர்களோ பணம் சேகரிப்பது சட்டவிரோதமானதும் என்று அறிவித்துள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை வைத்தியசாலை அபிவிருத்திகளுக்காக நிதி உதவி செய்யவிரும்புபவர்கள் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினூடாக அன்பளிப்புச் செய்து பற்றுச்சீட்டைப்பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார். (52)

# இழப்புகளுடன் முகாம் திரும்பினர்

(திருமலை)

தோப்பூர் முகாம் காவலரணிலிருந்து நேற்று வெளியேறிய படையினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பல பலியானதாக தெரியவருகிறது.

இத்தாக்குதலையடுத்து படையினர் இழப்புகளுடன் முகாம் திரும்பினர். மேலும் பல படையினர் படுகாயமடைந்துமுள்ளனர். (வி)

# தென்தமிழீழ அகதிகளுக்கு உதவி

[கொழும்புத்துறை]

கொக்குவில் மேற்கு. சிற்றாரவையினர் அவதியுறும் தென்தமிழீழமக்களுக்கு உடுபுடவைகள், பணம், பாத்திரங்கள் முதலியனவற்றைச் சேகரித்து உதவியுள்ளனர். [154]

# சிறுதானியங்கள் பயிரிடக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பெரும்போக நெல் அறுவடை முடிவடைந்ததும் தமிழீழத்தில் தற்போது நிலவி வரும் உணவுத்தட்டுப்பாட்டை மனதில் கொண்டு சகல விவசாயிகளும் சிறுதானியங்களைப் பயிரிடுமாறு விவசாயப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பயறு. எள்ளு. கௌபி போன்ற பயிர்களை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை கமத்தொழில் சேவைத்திணைக்களமும் கமநலசேவை திணைக்களமும் தற்போது மேற்கொண்டு வருகின்றன.

விவசாயிகள் அனைவரும் தத்தமது கமநலசேவைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [வி]

# காணாமல்போன 40,000 பேரின் விபரம் அன்னையர் முன்னணிவசம்

[கொழும்பு]

இலங்கையில் தெற்கே கடந்த சில வருடங்களில் காணாமல் போன சுமார் 40,000 பேரினதும் பூரண விபரங்கள் தம்வசமுள்ளதாக 'அன்னையர் முன்னணி' அறிவித்துள்ளது.

இம்மாதம் 19ம் - 21ம் திகதிகளில் அரசுக்கு எதிராக மனித உரிமை மீறல் குறித்த பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்த இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

மேற்படி விபரங்கள் அரசுக்கு சர்வதேச ரீதியில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்துமெனவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

# இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையில் முதலாம்தர லிகிதர் பதவியை வகித்து வந்த திரு. சுப்பிரமணியம் பத்மநாதன் அதிவிசேட முதலாம்தர பதவி உயர்வுபெற்று வவுனியா நகராட்சி மன்றத்தில் கடமையாற்றுவதற்காக பெப்ரவரி முதலாம் திகதி இடமாற்றம் பெற்றுள்ளார். (ஈ)

# சுத்திகரிப்பு வேலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரை மீள்நிர்மாணம் செய்யும் கட்டமாக பெரியகடைப் பகுதியிலும் நாவாந்துறைப்பகுதியிலும் சுத்திகரிப்பு வேலைகள் அண்மையில் நடைபெற்றன.

யாழ். மாநகரசபையின் அனுசரணையுடன் 500 தொண்டர்களும் சிரமதான அடிப்படையில் மேற்படி சுத்திகரிப்புவேலைகளில் இணைந்து செயற்பட்டார்கள். (சி 153)

# வடக்கு-கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் சென்று கொண்டிருந்த கவசவாகனம் முற்றாக சேதமடைந்தது. இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டதுடன் பல இராணுவத்தினர் படுகாயமடைந்துமுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் சிலாவத்துறையில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட கடும் மோதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நண்பகல் கஜுவத்தை முகாமிலிருந்து சிலாவத்துறை முகாமுக்கு இராணுவத்தினர் வந்தபோது விடுதலைப் புலிகள் இராணுவத்தினரை இடைமறித்து தாக்குதல்மேற்கொண்டதில் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. [வி]

# சாவகச்சேரியில் சன்லைட்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரியிலுள்ள நான்கு வர்த்தக நிறுவனங்கள் சன்லைற் சவர்க்காரத்தை தேவையான அளவு பெற்றுக்கொள்ளுமுகமாக நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்து வருகிறார்கள். (ஈ)

# பிறப்புச் சான்றிதழ் பத்திரங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட பதிவாளர் அலுவலகத்துக்கு 4,500பிறப்பு சான்றிதழ் பத்திரங்களே கொழும்பிலிருந்து வந்துள்ளன.

பிறப்புச்சான்றிதழ் விண்ணப்பதாரிகளின் தேவையை பூர்த்திசெய்ய இவை இறிதளவேனும் போதுமானதாக இல்லை.

கடந்த வருடம் பிறப்புச் சான்றிதழ் பிரதிகள் கோரி 28 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர். [153]

# கொத்தணி அதிபர்

[நல்லூர்]

கோண்டாவில் கொத்தணி அதிபராக திருமதி சரஸ்வதி ஜெயராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு அண்மையில் முதலாம்தர அதிபர் பதவி உயர்வுகிடைத்தது கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் இவர் கடமையாற்றுவார். (152)

# வல்வை அகதிகளுக்கு உலர் உணவு

(வடமராட்சி)

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம வல்வை அகதிகளுக்கு ரூபா 62071.60 சதம் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை வழங்கியது.

சென்ற மாதம் விமானப் படையினரினால் பாரிய தாக்குதலுக்குள்ளான வல்வை மக்களுக்கு அரிசி, மா, சீனி, பருப்பு பாண் போன்ற உலர் உணவுகளை மேற்படி கூட்டுறவுச் சங்கம் வழங்கியுள்ளது. (51)

# இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அண்மையில் காலஞ்சென்ற மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. ஈ. கே. குமரையாவின் உருவப்படத் திறப்பு வைபவமும், அஞ்சலிக் கூட்டமும் நடைபெறுமென இச்சங்கத்தின் காரியதரிசி திரு. எஸ். அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார். (வி)

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை கூட்டுறவு நலன்விருத்தி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 9-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் வெளிநோயாளர் பகுதியில் நடைபெறவுள்ளது. (ஈ)

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபையின் சுகாதார வாரத்தையொட்டி இன்று 9ந் திகதி பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் சுகாதாரக் கருத்தரங்கும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கிறது. (மா)

# பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்து தட்டுப்பாடு

[பருத்தித்துறை]

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குப் பெருந்தட்டுப்பாடேற்பட்டுள்ளதால் இங்கு சிகிச்சை பெறும் நோயாளர்கள் பெரும் இன்னல்களை யனுபவித்து வருகின்றனர்.

நீரிழிவு, ஆஸ்மா, இருதய நோய், ஏற்புவலி, விசர்நாய்கடித் தடுப்பு ஊசி மருந்து. மனநோய்களுக்கான மருந்து வகைகள் இவ் வைத்தியசாலையில் இல்லை.

பருத்தித்துறைப்பகுதியில் உள்ள தனியார் வைத்தியர்கள், மருந்துச் சாலைகளிலும் இம்மருந்து வகைகள் இல்லை. இதனால் பல நோயாளிகள் மரணத்தைத் தழுவிக்கொள்ளவேண்டிய அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதே வேளையில் கொழும்பிலிருந்து வருபவர்கள் தமது நோய்க்கு சொந்தப்பாவனைக்குக் கொண்டுவரும் மருந்து வகைகளும் வவுனியாவில் வைத்து பாதுகாப்பு படையினரால் பறிமுதல் செய்யப்படுகிறது. [வி]

# மகஜர் அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியம் பெறுவோர் தமக்குக் கடந்த காலங்களில் ஏற்பட்டுவரும் இடையூறுகளை விபரித்து மகஜர் ஒன்றை யாழ் அரசாங்க அதிபரூடாக எதிர்வரும் 13ந் திகதி ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்ப உள்ளனர்.

அன்றைய தினம் காலை 9-00 மணிக்குச் சகல ஓய்வூதியம் பெறுவோரையும் யாழ். செயலகத்தின் முன்பாகக் கூடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. (வி)

# இராசிபலன்

09-02-1991

சனிக்கிழமை

மேடம்: குடும்பத் தொல்லை, பணவிரயம், மன அமைதிகுன்றல்.

இடபம்: சகோதரர் பகை, தொழில்போட்டி, அந்நிய வாசம்.

மிதுனம்: கடின உழைப்பு, தொழில் லாபம், குடும்ப மகிழ்ச்சி.

கடகம்: பெரியோர் ஆசி, புதிய சிந்தனை, வீட்டில் சுபகாரியம்.

சிங்கம்: கவனக்குறைவு, வீண்பழி, குடும்பச் சச்சரவு, அகால போஜனம்.

கன்னி: தான்தோன்றித்தனம், மனக்குமுறல், தொழில் பிணக்கு.

துலாம்: காரியசித்தி, கிடைப் பேச்சு, தொழில் லாபம், மகிழ்ச்சி.

விருச்சிகம்: அந்நியர் உறவு, பொருட்செலவு, அலைச்சல், அவமதிப்பு.

தனுசு: புதிய நிலை, தொழில் பாராட்டு, குடும்ப சுகம், கௌரவம்.

மகரம்: பகைவர் தொல்லை, மனக்குழப்பம், அஞ்ஞான வாசம்.

கும்பம்: தாய்வழி துன்பம், தொழில் மாற்றம், குடும்ப உல்லாசம்.

மீனம்: தெய்வீக செலவு, காரிய வெற்றி, பணப் புழக்கம், பாராட்டு.

- ஜோஸ்யர்

## ★ 23ம் நாள் வளைகுடா யுத்தம்

# தரை வழி தாக்குதலுக்கு அமெரிக்கா பாரிய ஏற்பாடு

### - கருத்து முரண்பாடு வலுக்கிறது -

(பகுதாத்)

ஈராக்மீது தரைப்படை, கடற்படை தாக்குதலை ஒரே நேரத்தில் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை அமெரிக்க பன்னாட்டு படைகள் துரிதமாக செய்துவருகின்றன.

17,000 படை வீரர்களுடன் மற்றொரு அமெரிக்க கப்பல், வளைகுடாவிற்கு விரைந்துள்ளது.

**பாலங்கள்மீது தாக்குதல்**

ஈராக்கிலுள்ள முக்கிய பாலங்கள் வீதிகள் மீது அமெரிக்க படைகள் தொடர்ந்து விமானத்தாக்குதலை நடாத்திவருகின்றன.

இந்தியாவின்சமாதானமுயற்சிக்கு சீனு ஆதரவு தெரிவித்துள்ளது. ஆனால் இந்த சமாதான முயற்சியை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை.

**மக்கள் வாழும் பகுதியில்**

அமெரிக்க நேச நாட்டுப் படைகள் தொடர்ந்து குடிமக்கள் வாழும் பகுதிகளில் குண்டுத்தாக்குதலை நடாத்திவருவதாக ஈராக் குற்றம் சாட்டியுள்ளது.

ஈராக்கில் தற்போது தங்கியுள்ள அமெரிக்க அற்ரோனி ஜெனரல்இதனைஉறுதிப்படுத்தியுள்ளார். நேசப்படைகளின் தாக்குதலில் பொதுமக்கள் இறப்பு அதிகம் என அவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிற்கு 2-ம் கட்ட மருந்து வகைகளை அனுப்புவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

வளைகுடாப் போரில் இந்தியாவின் சமாதான முயற்சியை குவைத்தின் சிறப்புத் தூதுவர் பாராட்டியுளளார்.

**ஜோர்தானின் கருத்துகள்**

பன்னாட்டுப் படைகளின் விமானத் தாக்குதல்களையிட்டு ஜோர்தான் தெரிவித்த கருத்துக்களைத் தொடர்ந்து ஜோர்தான் ஈராக் பக்கம் சாய்வதாக அவதானிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க பன்னாட்டுப் படைகள் இதுவரை குவைத் மீது மட்டும் 600 தடவைகள் தாக்குதல்கள் நடாத்தியுள்ளன.

**எல்லைகள் மீது குண்டு வீச்சு**

ஈராக்கிலிருந்து ஜோர்தான், சவுதிக்குச் செல்லும் எல்லைகள் மீதுள்ள பிரதான வீதிகள் மீது அமெரிக்க. பன்னாட்டுப் படைகள் விமானத் தாக்குதல் நடத்தியுள்ளன. தரைடபடைத் தாக்குதலுக்கான முன்னேற்பாடு இது வென அவதானிகள் கருதுகின்றனர்.

**மத்தியகிழக்கு நாடுகள் எதிர்ப்பு**

ஈராக், குவைத்மீதுதொடர்ந்து கடும் விமானத்தாக்குதல்களை மேற்கொண்டுவருவதில் பிரிட்டன், பிரான்ஸ் நாடுகள் உட்பட மத்திய கிழக்கு நாடுகளும் எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

விமானத் தாக்குதலிலும் தரைப்படை தாக்குதல்களை தொடங்கவேண்டும என்பதிலும் பன்னாட்டுப் படைகளின் மத்தியில் இழுபறி ஏற்பட்டுள்ள நிலைமை வளைகுடா யுத்தத்தின் ஆரம்ப கட்டத்தில் பன்னாட்டுப் படைகள்மத்தியில் நிலவிய ஒருமித்தகருத்து நிலைப்பாடுபலவீனம்அடைந்து செல்வதையே காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்கா உட்பட நேசநாட்டு படைகள் யுத்தத்தை நீடித்துக்கொண்டே செல்வது தாக்குப்பிடிக்கமுடியாத அளவுக்கு செலவினத்தையும் அதிகரித்துவிடும் என்றுஅஞ்சபடுகிறது.

---

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்குவரும் தமிழர்கள் உடனடியாக பொலிஸ் நிலையங்களில் தங்கள் பெயர்களை பதிவுசெய்தால் அநாவசிய தலையீடுகளை தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

---

### லொறி மோதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போது தலை லொறியுடன் அடிபட்டு அதே இடத்தில் துடிதுடித்து மரணமானர். 35 வயது மதிக்கத்தக்க இவர் மானிப்பாயை சேர்ந்தவர் எனதெரியவருகிறது. [23]

---

### வாக்கெடுப்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரணை தோல்வியடைந்தது. விசாரணைக் கமிஷன் அமைக்கப்படுவதும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு இக்கொலையில் எதுவித தொடர்புமில்லாவிடின் ஏன் விசாரணை நடாத்துவதை கடுமையாக எதிர்க்கிறதென எதிர்க்கட்சிகள் கேள்வியெழுப்பியுள்ளன.

---

### தமிழ் குழுக்களுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய அனைத்து கட்சிகளையும் அவர் இந்த விஜயத்தின்போது சந்தித்து வடக்கு-கிழக்கு நிலைமை குறித்து பேசுவாரெனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இப்பிரச்சனைக்கு புலிகளை தவிர்த்து தம்மூலம் தீர்வுகாணுமாறு கொழும்பிலுள்ள தமிழ் குழுக்கள் திரு. சுக்லாவை வற்புறுத்தியுள்ளனவாம். (கி)

---

### தென்மராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து கலியர் மற்றும் கரணைட் தாக்குதல் நடத்தப்பட்டது.

கொடிகாமம், மீசாலை, சாவகச்சேரி, கைதடி. உட்பட பல பகுதிகளில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டன.

இதேவேளை மீசாலைப் பகுதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விமானத்தாக்குதலில் எஸ் சுரேஸ் (16 வயது-டலை) என்னும் மாணவனே இறந்தவரென அடையாளம் காணப்பட்டது. இதேவேளை நேற்று பகல் பதினொரு மணியளவில் ஹெலி ஒன்று கோப்பாய் பகுதியில் உள்ள குடிமனைகளை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தது.

---

### விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை பாலத்தில் இடம்பெற்ற மோசமானசைக்கிள் விபத்தில் சிக்கி காரைநகர் கோவளத்தைசேர்ந்த க. சோதிலிங்கம் (வயது-29) வலது கைமுறிந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தலையிலும் இவருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. [சி]

---

### ஷெல் வீச்சு

(பலை)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து இயக்கச்சிப் பகுதியை நோக்கி ஷெல் வீச்சு இடம்பெற்றது.

---

### இன்று

(கொழும்புத்துறை)

யாழ். திருநெல்வேலியிலுள்ள சைவத் தொண்டர் நிலைய முதலாவது ஆண்டுவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நிலையத்தலைவர் திரு. தெ. ரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (154)

---

### புலிகளின் பலம்பற்றி

(1ம் பக்க தொடர்ச்சி)

அண்மைக்காலச் செயற்பாடுகள் இதனை தெளிவுபடுத்துகின்றன, பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்படுவதை அரசு மறைத்துவிடுகிறது.

புலிகளின் பலம் ஒவ்வொரு தாக்குதலிலும் பலபடைந்து வருவது பல சம்பவங்களிலுமிருந்து காணக்கூடியதாயுமுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (சி)

---

## சட்டசபை தேர்தலில் தி. மு. க. போட்டியிடும்

(சென்னை)

"தமிழ் நாட்டில் பொதுத் தேர்தல் ஒன்று நிகழ்தப்படுமாயின் தி மு கழகம் கட்டாயம் பங்குபற்றும்"

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தி. மு. க தலைவருமான திரு. மு. கருணாநிதி சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்ட சமயத்தில் தாம் மிகுந்தமனவேதனை அடைந்ததாக கூறினார்.

தி. மு. கழகம் தனது தோழமைக்கட்சிகளுடன் ஏற்கனவே தேர்தல் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது என பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை தான் முற்றாக மறுப்பதாகவும் தெரிவித்தார். (க)

---

## பொம்மர் தாக்குதல் வன்னியில் ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியா சாஸ்திரிகுளம் பகுதியில், நேற்றுப்பகல் 11 மணியளவில் இரு பொம்மர்கள் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் குண்டுகளை வீசியதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், பல வீடுகளும் சேதம் அடைந்தன.

இதேநேரம் இப்பகுதிகளில் விடுதலைப்புலிகளுக்கும், ராணுவத்துக்குமிடையில் ஏற்பட்ட நேரடி மோதலில், புலிகள் தரப்பில் அஜந்தன் (சின்னையா சூரியக்குமார், செட்டிகுளம்) என்னும் போராளி வீரமரணமடைந்தாகவும் இராணுவத் தரப்பிலும் உயிர் சேதம ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (வி)

---

### உலகவரலாற்றின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர்களின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்:

தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு: கேபாப்பா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. யோகி மேலும் பேசுகையில் கூறியதாவது:- "பட்டம், பதவி, சொகுசு வாழ்க்கை போன்றவற்றை விரும்புகின்ற மக்களுடன் நாம் இருக்கவில்லை, எமக்கு விடுதலை வேண்டும் என்ற உணர்வோடு போராடிய மாவீரர்களுடன் தான் நாம் இருக்கிறோம்."

"இலங்கை அரசுடன் நாம் பேச்சு நடத்துகிற காலத்தில் இலங்கை அரசாங்கம் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமெனவும் அதில்எமக்கு சில மந்திரிப் பதவிகள் தரலாம் எனவும் கூறி எம்மை விலைக்கு வாங்கநினைத்தது. மக்கள் மத்தியில் குண்டுகளைப் போட்டு உணவுத்தடை, மருந்துத் தடை என்பவற்றை விதித்தும் புலிகள் மீது வெறுப்பை உண்டாக்கலாம் என நினைக்கிறது."

---

### தொழிற்சாலை

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்திலுள்ள நானாட்டான் உதவிஅரசாங்க அதிபர்பிரிவிலுள்ள வஞ்சியன் குளத்தில் பனந்தும்புத் தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளது. (153)

---

இன்று தமிழினம் முழுமையாக போராடுகிறது. எமது போராளிகள் எந்த நேரமும் பல தியாகங்களைச் செய்ய முன்வருகிறார்கள்.

கொடிகாமத்தில் நடைபெற்ற இவ்வஞ்சலிக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இராஜன், திரு. ஆஞ்சநேயர், தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு. தினேஸ் உட்பட பலர் இரங்கலுரை நிகழ்த்தினர்கள். (107)

---

## மரண அறிவித்தல்

### முத்து பொன்னுத்துரை

திருநெல்வேலி மேற்கு அம்மன் வீதியைச்சேர்ந்த முத்து பொன்னுத்துரை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற செல்லத்தின் அன்புக்கணவரும், தனேஸ்வரி, இந்திராதேவி, முத்துக்குமாரசாமி [France], தருமராசா, ஜெயகாந்தன், காலஞ்சென்ற தவமணிதேவி, பரமானந்தன், பத்மினிதேவி ஆகியோரின் அன்புத்தகப்பனும், செல்வரட்ணம், சிவானந்தம், கமலாதேவி, கதாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், யாழினி, திருக்குமரன், பகீர், சயிலோ, திருச்செந்தூரன், ரமேஷ், நரோ, துஷி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [09-02-91] காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

"பத்மினி இல்லம்"
அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு.

தகவல்:
இ. செல்வரட்ணம்
(கி 4339)

---

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.